4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் 2023-2024-ல் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் 2024-2025-ல் எடுத்துக்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்த விவரங்கள் சிறுகணினிகளில் பதிவேற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 7–5–2022 அன்று விதி 110-ன்கீழ் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்" அறிவிக்கப்பட்டு, திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவரவர்கள் தொகுதியில் செயல்படுத்தப்பட வேண்டிய பத்து முக்கியத் திட்டங்கள் குறித்து தெரிவிக்குமாறு கடிதம் மூலமாகக் கேட்டுக்கொண்டார்கள். "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் 2023–2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் 2024–2025 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்த விளக்கங்கள் PDF வடிவத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் இருக்கைக்குமுன் உள்ள சிறுகணினிகளில் தனித்தனியே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2023–2024 ஆம் ஆண்டிற்கான . . . (குறுக்கீடு)

5. தகவல் கோரல்

குறு, சிறு தொழிலாளர்கள், மின் கட்டண உயர்வினால் வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தங்கமணி அண்ணே ஒரு வார்த்தை கேளுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில வாரங்களாக குறு, சிறு தொழில் செய்பவர்கள் மின் கட்டண உயர்வினால் வேலைநிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அரசினுடைய கவனத்திற்கு. . .*

[*2023 அக்டோபர் 9*

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் . . . (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை அதற்காகத்தான் பல உறுப்பினர்கள் விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதற்குரிய பதில் வந்துவிட்டால் நான் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் செய்பவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் என்பதுதான் செய்தி. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை அவர்கள் கூறியது குறு, சிறு தொழில் செய்பவர்கள், கிட்டத்தட்ட (குறுக்கீடுகள்) அவர்கள் சொல்லிவிட்டார்கள், போராட்டம் செய்துகொண்டிருக்கிறார்கள் அதைப் பற்றித்தான் சொல்கிறார்கள். அதுபற்றி 10–க்கும் மேற்பட்டவர்கள் என்னிடம் காலையில் விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஒருவரைப் பேச வைத்தால் பத்து பேருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். பதில் வந்துவிடும், நாளைக்கு நிச்சயம் எடுத்துக்கொள்கிறேன். திரு. பி. தங்கமணி அண்ணனே பேசலாம். நன்றி.*

6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2023–2024, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இந்த மாமன்றத்தில் வைப்பதற்கான வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினை முதற்கண் உரித்தாக்கிக்கொள்ள விரும்புகிறேன். வங்கக் கடலோரம் துயிலும் எங்கள் தங்கத் தலைவர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, இந்தத் துணை மதிப்பீடுகளை இந்த அவைமுன் வைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை